2023

முத்தரசி

கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்

VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023

# பழந்தமிழரின் இயற்கை வழிபாடு

**ந.பிரகாஷ்,**

**முனைவர்ப் பட்ட ஆய்வாளர்,இலக்கியத்துறை,**

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 10.**

உலகம் தோற்றம் முதல் மனிதர்கள் தனித்துச் செயற்படும் தன்மையில் இல்லை. அவர்கள் ஏதாவது ஒரு சூழ்நிலையில் ஒன்றைச் சார்ந்து வாழ்கின்றார்கள். மனிதர்கள் மட்டுமல்லாது எந்தவோர் உயிரினமும் மற்றோர் உயிரினத்தைச் சார்ந்தே வாழுகின்றது. பழங்கால மனிதர்கள்இயற்கையோடு இயைந்த வாழ்வாக இயற்கையைச் சார்ந்து ஒழுகினர். இயற்கையில்கிடைக்கும் பொருள்கள் உணவாக அமைந்துள்ளதால் அவர்கள் இயற்கையோடு இயற்கையாகவாழத் தொடங்கினர். இயற்கையைத் தவிர வேறு எவ்விதச் சிந்தனையும் அவர்களுக்கு எழவில்லை. இயற்கையின் சீற்றங்களுக்கு ஆட்படுகின்றனர். நன்மை, தீமை பயக்கும் இயற்கையைக் கண்டு அஞ்சினர். அச்சத்தின் காரணமாக இயற்கையை வழிபடத் தொடங்கினர் எனலாம். அச்சத்தின் விழைவே வழிபாடு தோன்றின. பழந்தமிழரின் இயற்கை வாழிபாட்டினை இக்கட்டுரை ஆராய்கின்றது.

### வழிபாடு (WORSHIP)

வழிபாடு என்னும் சொல் வழி + படு என்று பிரிந்து ‘வழிப்படுத்துதல்’ என்னும் பொருள்படும். வழிபடு என்பதிலிருந்து ‘வழிபாடு’ என்னும் சொல் தோன்றியது. வழிபடு என்பதற்கு வணங்குதல், வழியில் செல்லுதல், பின்பற்றுதல், நெறிப்படுத்துதல், பூசனை முறை என்று தமிழகராதிகள் பொருள்தருகின்றன. தெய்வங்களை மகிழ்விப்பதற்காக மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் அனைத்துமே வழிபாடாகும். இறைவனுடன ் இரண்டறக் கலப்பதே வழிபாடு என்றும், உள்ளக் கதவினை இறைவனுக்காகத் திறப்பது வழிபாடு என்றும் வழிபாடு குறித்துப் பல்வேறு விளக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால், முன்னோர் இட்டுச் சென்ற வழியில் செல்லுதலே வழிபாடு என்பது சாலப் பொருந்தும்.

### இயற்கை வழிபாடு (NATURE WORSHIP)

இயற்கையின் கூறுகளான நிலம், நீர், காற்று, ஆகாயம், மலை, ஞாயிறு, திங்கள் போன்ற இயற்கைப் பொருள்களை வழிபடும் தன்மையையே இயற்கை வழிபாடு என்பர். இயற்கையின் சூழல்களுக்கு ஏற்ப மனிதர்கள் தமது வழிபாட ்டினை வகுத்துக்கொண்டார்கள். அச்சத்தின் விளைவே வழிபாடாகும். பேரிடியையும், பெருமழையையும், பொங்கும் கடலையும், பெருகும் ஆற்றையும் சூறைக்காற்றையும் கண்டு அஞ்சிய மனிதர்கள் இயற்கையை வழிபடத் தொடங்கினார்கள்.

### இயற்கை அமைப்புமுறை

இயற்கை ஐம்பெரும்பூதங்களால் சூழப்பட்டது என்றும், அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தன்மையின் காரணங்களால் அமையப் பெற்றவை என்றும் எளிதில் உணரலாம். பஞ்சபூதங்களான

SAMPLE

முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023
2023

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் போன்றவை இயற்கையின் அமைப்புகளாகும். இவை தோன்றிய தன்மையினைச் சங்கப் புறநானூறு,

**மண்திணிந்த நிலனும்**
**நிலன்ஏந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**
**வளத் தலைஇய தீயும்**
**தீமுரணிய நீரும் என்றாங்கு**
**ஐம்பூதத்து இயற்கை……. (புறம். 2 : 1 – 6 )**

என்று சுட்டுகிறது. மண் செறிந்த நிலமும், அந்நிலத்தின் மேல் உயர்ந்த வானமும், அவ்வானம் தழுவி வரும் காற்றும், அக்காற்றால் எழுந்த தீயும், அத்தீக்கு முரணாக நீரும் ஒன்றுடன் ஒன்றைத் துழுவி இயற்கையின் கூறுகளால் உலகம் அமைந்துள்ளது. இக் கூறுகளை மனிதர்கள் தம் சூழ்நிலைக்கேற்ப வழிபடத் தொடங்குகின்றார்கள். இவ் வழிபாட்டின் நீட்சியே ஐம்பூத வழிபாடாகும்.

**நிலம்**

நிலத்திற்கு உயிர்ப்பு உண்டு என்ற நம்பிக்கை தமிழகக் கிராமங்களில் வாழும் நாட்டுப்புற மக்களிடம் உள்ளது. நிலத்தின் வளத்தைப் பெருக்கவும் அதன் மூலம் நல்விளைச்சலைப் பெறவும் மக்கள் நிலமகளுக்கு வழிபாடு செய்வதனை இன்றளவும் அறியலாம். வேணான்மையின் தொடக்கத்தில் நிலத்திற்கு வழிபாடு செய்த பின்னரே உழவர்கள் தம் வேளாண்மைப் பணிகளைச் செய்கின்றனர். பண்டைத்தமிழரின் தைப்பொங்கல் வழிபாடு, நிலமகள் வழிபாட்டின் மருகிய எச்சம் சுட்ட இடனுண்டு.

**நெருப்பு ( தீ )**

நெருப்பு விலங்கிடமிருந்து மாந்தர்களைப் பிரித்து உணவு நாகரிகத்தைத் தோற்றுவித்தது. உணவுகளைப் புசித்து உண்ண நெருப்பு மனிதர்களுக்குத் தேவைப்பட்டது. இதனால் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாததாகவும் தீ வலிமையானதாகவும் இருந்ததனால் இதனைக் கடவுளாகக் கருதிப் போற்றி வந்துள்ளனர்.

**நீர்**

ஆற்று நீர், குளத்துநீர், கடல்நீர் போன்றவை அனைத்தும் மக்களால் வழிபடப்பட்டன. நீர் வானின் வண்ணத்திற்கேற்பத் தன்னுடைய போக்கையும் மாற்றிக் கொள்கிறது. இதனால் நீர் உலகத்தையும் மனிதனையும் பிரிதிபலிக்கின்றது என்று பழங்குடி மக்கள் கருதினர். வேளாண்மை உற்பத்திக்கு நீர் இன்றியமையாத தேவையானதால் நீரை ஆற்றல் மிகுந்த சக்தியாகக் கருதினர். உலகம் தோன்றும் காலத்தில் நீர் அனைத்துமாக இருந்தது. நீரில் இருந்து மற்றவை தோன்றின என்றும் நீர் எல்லாவற்றுக்கும் அடிப்படையான ஒன்று என்றும் கருதினர்.

**வான் (ஆகாயம்)**

முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023
2023

இடி, மழை போன்றவை மிகுதியாகக் காணப்படும் அடர்ந்த வெப்பமான காடுகளில் வாழ்ந்த தொல்பழங்குடிகளிடம் வான் வழிபாடு பெருவழக்கில் இருந்தது. சமதரையில் வாழ்ந்து வந்த முல்லை நில மக்களிடம் இவ்வழிபாடு இருந்து வந்தது. சான்றாக, ஆப்பிரிக்காவில் ஸ்டெப்பி புல்வெளியில் வாழ்ந்த இடையர் குலமக்களிடையே வானத்தை விலங்குகளின் கடவுளான பண்டைய வேட்டைத் தெய்வத்துடன் ஒப்பிட்டுக்காணும் வழக்கம் இருக்கிறது. சீனாவில் கடவுளர்க்கெல்லாம் பெருங்கடவுளாக வானக்கடவுளைக் கருதினர் என்று தே.ஞானசேகரன் கூறுகின்றார். **(நாட்டுப்புறச் சமயம் தோற்றமும் வளர்ச்சியும், ப.12)**

**இலக்கணங்களில் இயற்கை வழிபாடு**

தமிழரின் தொன்மை இலக்கணமாகத் திகழ்வது தொல்காப்பியமாகும். இது பழந்தமிழரின் இயற்கை வாழ்வினை அகம், புறம் என்று வகுத்துள்ளது. புறத்திணைகளில் ஒன்றான பாடண் திணையில் மக்கள் இயற்கையினைத் தொழுதமையை,

> **“கொடிநிலை கந்தழி வள்ளி என்று**
> **வடுநீங்கு சிறப்பின் முதலான மூன்றும்**
> **கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே”** **(தொல். பொருள். 1034)**

என்த் தொல்காப்பியம் சுட்டுகின்றது. பழந்தமிழர்கள் இயற்கைக் கூறுகளாக மலை, கடல், ஞாயிறு, திங்கள் ஆகியவற்றை வழிபட்டமையைக் கூறலாம். தொல்காப்பியரும் ஞாயிறு, திங்கள், தீச்சுடர் ஆகிய இயற்கையின் முக்கூறுகளை வழிபட்டதைப் பாடாண் திணையில் கூறுகின்றார்.

ஞாயிறும், திங்களும் ஒவ்வொரு மனித உடலின் இருகண்களாக உள்ளன. இதுவே மனிதன் இயற்கையை நோக்கி வழிபட ஒருகாரணமாக அமைந்திருக்காலம்.

> **“கதிர், மதி உடல்தொறும் கண்கள் ஆதலின்”** **(அறு. இல. பொருள். 113)**

ஞாயிறு, திங்கள் இரு சுடரையும் கண்களாகக் கொள்வது சமயநூற் கொள்கையாகும் என அறுவகை இலக்கணம் கூறுவது இயற்கை வழிபாட்டு முறைமையின் கூறாகக் கொள்ளலாம்.

**இலக்கியங்களில் இயற்கை வழிபாடு**

இயற்கையின் கூறுகள் மனித நலத்திற்குப் பயன்பட்டமையை உணர்ந்த மக்கள் அதன் அரும் பண்பினைப் போற்றி வழிபட்டனர். பின்னர் அதுவே காலப்போக்கில் இலக்கிய மரபுகளாக உருப்பெற்றுள்ளன. சிலம்பில் மங்கல வாழ்த்துப்பாடலில் திங்கள், ஞாயிறு, மலை போன்ற இயற்கை வழிபாட்டைச் சுட்டலாம்.

**ஞாயிறு வழிபாடு**

ஞாயிறு வழிபாட்டைப் பழந்தமிழ் மக்கள் பெரிதும் போற்றி வந்துள்ளனர். பொங்கல் திருநாள் இவ் வழிபாட்டிற்குரிய முதன்மைத் திருநாளாகும். அறுவடை செய்து தானியங்களைக் கதிரவனுக்குப் படைத்து பொங்கலிட்டு வழிபடுகின்றனர். வான் கடவுளின் துணைத் தெய்வமாகக் கதிரவனை வழிபடும் மரபு உண்டு. பழந்தமிழ் மக்கள் காலையில் சூரியனைத் தொழுதமையினை,

**"தயங்குதிரைப் பெருங்கடலுலகு தொழத்தோன்றி**
**வயங்குகதிர் விரிந்த வுருகெழு மண்டிலம்" (அகம்.263 : 1 - 2)**

என்று அகநானூறு சுட்டுகிறது.

மேலும், நற்றிணையும்

**"முந்நீர் மீமிசைப் பலர்தொழத் தோன்றி**
**ஏமுற விளங்கிய சுடரினும்**
**வாய்மை சான்றநின் சொல்நயந் தோர்க்கே (நற்.283 : 6 - 8)**

என்று கூறுகின்றது.

**கடல் வழிபாடு**

கடலும் கடல்சார்ந்த இடமும் நெய்தல் நிலமாகும். நெய்தல்நில மக்கள் கடலைத் தெய்வமாக வணங்கினர். தொல்காப்பியர் நெய்தல்நிலத் தெய்வமாக வருணனைக் குறிப்பிடுகிறார். வருணன் உருவவழிபாடக உருவெடுக்கின்றது. நெய்தல் நிலப் பரதவப் பெண்டிர் கடலைத் தெய்வமாக வழங்கியதை,

**"புகழ்மலி சிறப்பிற் கொற்கை முன்றுறை**
**அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து**
**தழை யணிப் பொலிந்த கோடேந்து அல்குல்**
**பழையர் மகளிர் பனித்துறைப் பரவ" (அகம்.201:4-7)**

என்று அகநானூறு சுட்டுகின்றது.

**மலை**

மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி நிலமாகும். குறிஞ்சிநில மக்கள் மலையினைத் தெய்வமாகப் போற்றி வந்தனர். குறிஞ்சிநில மகளிர் மலையினைத் தெய்வமாகத் தொழுதமையைக் கலித்தொகைப் பாடல்

**"கொடிச்சியர் கூப்பி வரைதொழு கைபோல்" (கலி.40:11)**

என்று கூறுகிறது.

**அனல் வழிபாடு ( தீ )**

பழங்காலத்தில் மனிதன் உணவுத் தேவைக்காகத் தீயினை உருவாக்கினான். தீயின் அருமையைக் கருதி வழிபடத் தொடங்கினான். சங்ககாலத்தில் தீக்கடவுளாகிய அனலை வழிபட்டு வந்தனர். இதனை,

SAMPLE

**"அல்லல் அல் அனலன்"** (பரி.5:57)

என்று பரிபாடல் சுட்டுகிறது.

துன்பம் கலவாத தூய நன்மை பயப்பவர் தீக்கடவுள். தீ இறைவனின் வடிவம்.

**"வாழத் தீயாய் நின்றாய்"**

என்று அப்பர் பெருமான் கூறுகின்றார்.

**ஐம்பூத வழிபாடு (சிவ வழிபாடு)**

இயற்கை வழிபாட்டின் நீட்சியாக இறைவழிபாடு உருவெடுக்கின்றது. பெருந்தெய்வ வழிபாடான சிவபெருமானைப் பஞ்சபூத வழிபாட்டுடன் இன்றளவும் தொழுகின்றனர். ஐம்பெரும் இயற்கை வழிபாடு சிவ வழிபாடாக உருவெடுக்கின்றது. இவை பஞ்சபூதத் (நீர், நெருப்பு, காற்று, நிலம், ஆகாயம்) தலங்களாகும்.

| வ. எண் | பஞ்ச பூதங்கள் | கோயில் | லிங்கம் | இடம் |
|---|---|---|---|---|
| 1. | நிலம் | ஏகாம்பரநாதர் கோயில், தியாகராஜர் கோயில் | பிருத்வி லிங்கம் | காஞ்சிபுரம், திருவாரூர் |
| 2. | நெருப்பு | அண்ணாமலையார் கோயில் | அக்கினி லிங்கம் (அ)ஜோதிலிங்கம் | திருவண்ணாமலை |
| 3. | நீர் | ஜம்புகேசுவரர் கோயில் | அப்பு லிங்கம், ஜம்பு லிங்கம் | திருவானைக்கா – திருச்சி |
| 4. | ஆகாயம் | நடராசர் கோயில் | ஆகாய லிங்கம் | சிதம்பரம் |
| 5. | காற்று | திருக்காளகத்தீசுவரநாதர் கோயில் | வாயுலிங்கம் | திருக்காளத்தி |

**முடிவுரை**

**"ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே"** என்று, இயற்கையின் ஓசை ஒலியோடு சிவபெருமானை இணைத்து உருவகப்படுத்தி அப்பர் சுவாமிகள் பாடினார்.இது இயற்கை வழிபாட்டினை நினைவுபடுத்துகிறது. இயற்கை வழிபாட்டில் இருந்து மனித மனம் வளர வளர இந்நிலை மாறித் தெய்வ வழிபாடாக உருவெடுத்துள்ளது. இயற்கை வழிபாடு இறை வழிபாட்டின் தோற்றுவாய் எனலாம். இயற்கை வழிபாடு பழங்காலத்திற்குப் பின்னர் நானிலத் தெய்வ வழிபாடாக மாற்றமடைகின்றது. மேலும், நடுகல் வழிபாடு, சிறு, பெருந் தெய்வ வழிபாடு, குழு வழிபாடு, இன வழிபாடு தோன்றியுள்ளது. இன்றைய வழிபாட்டு முறைகளுக்கு முன்னோடி இயற்கை வழிபாடென்பது திண்ணம்.

**துணைநின்ற நூல்கள்**

1. காந்தி. க, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2008.

SAMPLE

2. பரமசிவன். தொ, தெய்வங்களும் சமூக மரபுகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2006.

3. வேலுப்பிள்ளை. ஆ, தமிழர் சமய வரலாறு, குமரன் புத்தக இல்லம், சென்னை, 2011.

4. ஞானசேகரன். தே, நாட்டுப்புறச் சமயம் தோற்றமும் வளர்ச்சியும், காவ்யா பதிப்பகம், சென்னை, 2012.

SAMPLE